**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.13** |
| **Name** | **:** | **திரு.இளையபாரதி** |
| **Father's Name** | **:** | **பெருமாள்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.07.2023.**

**முதல் விசாரணை -**

**நான் வயலாத்துரில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். இறந்துபோன சுரேஷ் தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர். 21.1.2017ல் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். சுரேசின் பிரேதத்தை வாங்குவதற்காக காவல் ஆய்வாளர் என்னிடம் கையொப்பம்**

வாங்கினார்.

என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் (2,3,4,5 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள்) உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. இரண்டாவது கையொப்பம் வஜ்ஜிரவேலுடையது. என்னிடம் காட்டப்படும் மற்றொரு ஆவணத்தில் (கைப்பற்றுதல் மகசர்) உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் வஜ்ஜிரவேலுடையது. <u>கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.11 முதல் 15.</u>

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது 27.1.2017 அன்று இளையவேல், தனசேகரன், ஞானவேல்,குமரவேல் ஆகிய நான்கு பேரையும் போலிசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரி தான். 28.1.2017 அன்று காலை 7 மணிக்கு எதிரிகள் நான்கு பேரையும் போலிசார் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரி தான்.

போலிசார் மேற்படி நபர்களை விசாரிக்கும்போது என்ன செய்தார்கள் என்றால் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். ஒன்றாக கொடுத்தார்களா தனித்தனியாக கொடுத்தார்களா என்றால் தனித்தனியாக கொடுத்தார்கள். அவ்வாறு கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நானும் வஜ்ஜிரவேலும் கையொப்பம் போட்டோம் என்றால் சரி தான்.

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததின் அடிப்படையில் நாங்கள் காவல் ஆய்வாளர் உடன் இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம்.

சம்பவ இடத்தை அவர்கள் காட்டினார்கள். அது சம்பந்தமாக எங்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. புதுப்பாளையம் என்ற ஊரில் மாரியம்மன் கோயிலிடம் காந்தி வீட்டின் பின்புறம் இருசக்கர வாகனத்தை எதிரிகள் நான்கு பேரும் காட்ட காவல் ஆய்வாளர் அதை எடுத்துக்கொண்டார். அதற்காக ஒரு கையொப்பம் பெறப்பட்டது. அதற்கான கையொப்பம் தான் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பமாகும்.

இருசக்கர வாகனத்தை பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். டிஎன் 25-0309 ஆகும். மற்றொரு வாகனம் டிஎன்.25-1847 ஆகும். மேற்படி இரு வாகனங்களை பார்த்தால் அடையாளம் தெரியும். (மேற்படி இருசக்கர வாகனங்கள் எதிரிகள் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் மேற்படி வண்டியை நீதிமன்றத்தில் ஒப்படைக்க எதிரிகளுக்கு அறிவிப்பு அனுப்பியும், வாகனங்களை ஒப்படைக்காததால் ஜாமீன்தார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதில் வாகனங்களின் புகைப்படங்களை இந்நீதிமன்றத்தில் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்து, வாகனங்களை குறியீடு செய்வதில் ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.) புகைப்படங்களில் உள்ள வாகனங்கள் முறையே சான்று பொருள் 6 மற்றும் 7 ஆகும். எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதிகள் முறையே அ.சா.ஆ.16 முதல் 19 வரையாகும். மேற்கண்ட சங்கதிகளை நான் போலிசார் விசாரித்தபோது சொன்னேன் என்றால் சரி தான்.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னிடம் பெறப்பட்ட கையொப்பங்கள் அனைத்தும் ஒரே தேதியில்

தான் காவல்நிலையத்தில் பெறப்பட்டது என்றால் மருத்துவமனையில் ஒரு முறையும் காவல் நிலையத்தில் ஒருமுறையும் பிறகு 28.1.2017 அன்று காவாங்கரையில் வைத்து வாங்கப்பட்டது. காவாங்கரை எங்குள்ளது என்றால் வயலாத்தூர் புதுப்பாளையம் அருகே நடுவில் உள்ளது. காவாங்கரையில் எத்தனை கையொப்பம் வாங்கப்பட்டது என்றால் என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கப்பட்டது. காவாங்கரையில் வீடுகளோ, கடைகளோ எதுவும் கிடையாது என்றால் கிடையாது.

தூசி காவல் நிலையத்தில் இருந்து காவாங்கரை எவ்வளவு தொலைவு என்றால் 14 கிலோ மீட்டர். எனக்கு சுரேஷ் நண்பர். காவல்நிலையத்தில் போட்ட கையொப்பம் எத்தனை மணிக்கு போட்டேன் என்றால் சுமார் காலை 11,12 மணிக்கு போட்டேன். 28.1.2017 அன்று போட்ட கையொப்பம் எத்தனை மணிக்கு என்றால் சுமார் ஒரு மணிக்கு இருக்கும். 28.1.2017 அன்று தான் காவல்நிலையத்திலும் கையொப்பம் போட்டேன். காவல்நிலையத்தில் எத்தனை கையொப்பம் போட்டேன் என்றால் ஒரு கையொப்பம் தான் போட்டேன். இரு வாகனங்கள் எந்தெந்த எதிரியுடையது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் யார் யாருக்கு உரிமையானது என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் எதிரிகள் தான் எடுத்துக்கொடுத்தார்கள்.

வண்டி எடுத்தது எங்கு என்றால் புதுப்பாளையம் கிராமம் ஆகும். புதுப்பாளையம் கிராமத்தில் எவ்வளவு பேர் வசிக்கிறார்கள் என்றால் சுமார் 900 பேர் வசிக்கிறார்கள். என்னை விசாரிப்பதற்கு காவல் துறையினர் சம்மன் சார்வு செய்தார்களா என்றால் சம்மன் கொடுக்கவில்லை. மருத்துவமனையில்

சுரேசை பார்க்க சென்றபோது ஊர் மக்கள் உடன் இருக்கும்போது 28.1.2017 அன்று என்னையும் வஜ்ஜிரவேலுவையும் கூப்பிட்டார்கள். அவ்வாறு எங்களை கூப்பிடும்போது ஊர் மக்கள் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் ஒரு பத்து பேர் இருந்தார்கள். எத்தனை மணிக்கு வந்து கூப்பிட்டார்கள் என்றால் காலை 7 மணி இருக்கும். எங்களை அழைத்தபோது எதிரிகள் காவல் துறையினர் உடன் இருந்தார்களா என்றால் காவல் நிலையத்தில் இருந்தார்கள். ஊரில் இல்லை.

என் மீதும் மோகனவேல் மீதும் மற்றும் சிலர் மீதும் தூசி காவல்நிலையத்தில் ஒரு கொலை வழக்கு உள்ளது என்றால் இல்லை. விவசாயம் தவிர நான் வேறு வேலைக்கு செல்வது இல்லை என்றால் தேவைப்படும் நேரங்களில் கட்டிட வேலைக்கும் செல்வதுண்டு. அரசு தரப்பில் குறுக்கு விசாரணையின்போது சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல.

எதிரிகள் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் போட்டேனா என்றால் ஒரே பக்கம் முதல் பக்கத்தில் போட்டேன். முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தையும் தெரியாது என்று சொல்லிவிட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் சரி சரி என்று போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்ததை தான் நான் சொல்கிறேன்.

நான் சொல்வது போல் எதிரிகள் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில்

**எந்தவொரு இருசக்கர வாகனங்களையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.**

**1 முதல் 6 எதிரிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுவதாக 7 முதல் 10 எதிரிகள் தரப்பில் சொல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.